# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## கடற்றொழில் (வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்களை ஒழுங்குபடுத்தல்) (திருத்தம்)

***1979 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, கடற்றொழில் (வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்களை ஒழுங்குபடுத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அவர்களால்*
*2017, நவெம்பர் மாதம் 25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2017, நவெம்பர் மாதம் 08 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

[ ***219 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 45.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2-PL 010493-475 (2017/11)

### சட்டப்பயன் பற்றிய கூற்று

**வாசகம் 2** : இவ்வாசகம், பொதுவான திருத்தமொன்றைச் செய்வதன்மூலம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கடற்றொழில் (வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்களை ஒழுங்குபடுத்தல்) சட்டத்தைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, விடயம் தொடர்பாகச் செயலாளரின் பணிகளைப் பணிப்பாளர் தலைமையதிபதிக்குக் கைமாற்றுதலாகும்.

**வாசகம் 3** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, கரையோரக் காவல் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியையும் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்தி வலுவுக்கிடுவதற்கு அதிகாரமளிக்கப் படுகின்ற ஆட்களாக அமைச்சரினால் பெயரின்மூலம் அல்லது பதவியின்மூலம் எழுத்தில் பெயர்குறிக் கப்பட்ட வேறெவரேனும் ஆளையும் உள்ளடக்குதலாகும்–

**வாசகம் 4** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது–

(1) எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரைப் பின்வருமாறு செய்வதற்கு இயலச் செய்த லாகும்:-

(i) கைவிடப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு மீன்பிடிவள்ளத்தை மிக்க அண்மையிலுள்ள கப்பற்றுறைக்குக் கொண்டுவருவதற்கும் ; அத்துடன்

(ii) இச்சட்டத்தின்கீழ், விடயத்துக்கேற்ப, கப்பற்றொகுதியினருடன் கைப்பற்றப்பட்ட அல்லது தடுத்துவைக்கப்பட்ட எவையேனும் வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்களை, அத்தகைய வள்ளம் கைவிடப்படாதவிடத்து, செயல்முறைச் சிரமங்களை மேற்கொள் வதற்கென மேல் நீதிமன்றத்துக்குப் பதிலாக நீதிவான்முன்னர் கொணர்வதற்கும்.

(2) பணிப்பாளரின் அல்லது அரசாங்க அதிபரின் அதிகாரத்தைப் பணிப்பாளர் தலைமையதி பதிக்குக் கைமாற்றுதலாகும்.

**வாசகம் 5** : இவ்வாசகம், புதிய 13அ என்னும் பிரிவை உட்புகுத்துவதன்மூலம் முதன்மைச் சட்ட வாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, கைவிடப்பட்ட அல்லது கைப்பற்றப்பட்ட வள்ளம் எந்த நாட்டுக்குச் சொந்தமானதோ அந்த நாட்டின் தூதரக அலுவலருக்கு அறிவித்தலொன்றை, அதன்கண் குறித்துரைக்கப்பட்ட விபரங்களுடன், சமர்ப் பிப்பதற்காகவும், தடுத்துவைத்தல் தொடர்பில் இலங்கை அரசாங்கத்துக்குத் திரண்ட செலவு தொகை யையும் இடைநேர்விளைவான செலவுகளையும் அறவிடுவதற்காகவும் ஏற்பாடு செய்தலாகும்.

**வாசகம் 6** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளிலும் புறநீங்கலான பொருளாதார வலயத்திலும் சட்டத்தின் 4 ஆம் பிரிவுக்கும் 5 ஆம் பிரிவுக்கும் முரணாகப் புரியப்பட்ட தவறுகளுக்காக மீன்பிடி வள்ளத்தின் நீளத்தினது அடிப்படையில் அதிகரித்த குற்றப்பணங்களை விதித்தலாகும்.

**வாசகம் 7** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, இச்சட்டத்தின்கீழ் புரியப்பட்ட தவறுகள் தொடர்பில் தத்துவத்தைப் பிரயோகிப்பதற்கு நீதிவான்களை இயலச் செய்தலும், ஒரு வெளிநாட்டு மீன்பிடி வள்ளத் தினால் அனுமதிப்பத்திரமொன்றின் நிபந்தனைகள் மீறப்படுதல் தொடர்பில் குற்றப்பணத்தை அதிகரித் தலுமாகும்.

***வாசகம் 8*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, மீன்பிடி வள்ளத்தின் நீளத்தைக் கவனத்துட்கொண்டு, அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களுக்கு முட்டுக்கட்டையிடுதல் என்ற தவறுக்காக அதிகரித்த குற்றப் பணங்கள் தொடர்பில் தத்துவத்தைப் பிரயோகிப்பதற்கு நீதிவான்களை இயலச் செய்தலாகும்.

***வாசகம் 9*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 17அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதுடன், பிரிவின் சட்டப்பயனானது, இச்சட்டத்தின்கீழ் புரியப்பட்ட எல்லாத் தவறுகளையும் பிடியாணையின்றிக் கைதுசெய்யத்தக்கனவாகவும் பிணையில் விடுபடற்பாலதல்லாதனவாகவும் ஆக்குதலாகும்.

***வாசகம் 10*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், 8 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

***வாசகம் 11*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, மேல்நீதிமன்றம் தொடக்கம் மேன்முறையீடுகளைக் கேட்பதனை இயலச் செய்தலும் அவை மீண்டும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் கேட்கப்படுவதற்கான வாய்ப்பளித்தலும் பணிப்பாளரின் பதவிப் பெயரைப் பணிப்பாளர் தலைமையதிபதியாக மாற்றுதலுமாகும்.

***வாசகம் 12*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 19அ மற்றும் 19ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் இயைபான திறத்தவரினால் சட்ட உரித்துடைமை நீதிவானுக்கு எண்பிக்கப்படும்வரை, கைவிடப்பட்ட வெளிநாட்டு மீன்பிடி வள்ளத்தின் சொத்தாண்மையை அரசுக்குரித்தாக்குதலாகும்.

***வாசகம் 13*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, அமைந்தொழுகப்படவேண்டிய நடவடிக்கை முறையுடன் சேர்த்து புறநீங்கலான பொருளாதார வலயத்தில் முதற்றடவையாகப் புரியப்பட்ட தவறுகளுக்காகப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் தண்டமொன்று விதிக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்தலாகும்.

***வாசகம் 14*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 20அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதன் மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, நிபுணர்கள் குழாமொன்றை நியமிப்பதற்கு ஏற்பாடு செய்தலாகும்.

***வாசகம் 15*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, ஏதேனும் குற்றவழக்கு முடிவுறும்வரை, திருப்திகரமான முறியை அல்லது பிணைப்பொறுப்பை வழங்குவதன்மீது ஏதேனும் வள்ளம் விட்டுவிடப்படுவதற்கு ஏற்பாடு செய்தலும், இச்சட்டத்தின்கீழ் புரியப்பட்ட தவறுகள் தொடர்பிலான தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு நீதிவானை இயலச்செய்தலுமாகும்.

***வாசகம் 16*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, வெளிநாட்டு மீன்பிடி வள்ளமொன்று இலங்கையின் நீர்ப்பரப்புகளில் கண்டுபிடிக்கப்படுமிடத்து, சட்டத்தின் ஏற்பாடுகள் மீறப்பட்டமைக்கான ஊகத்துக்காக ஏற்பாடுசெய்தலாகும்.

***வாசகம் 17*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, இச்சட்டத்தின்கீழ் புரியப்பட்ட தவறுகள் தொடர்பிலான தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு நீதிவானை இயலச்செய்தலாகும்.

***வாசகம் 18*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, சர்வதேச சமவாயங்களிலும் உடன்படிக்கைகளிலும் விதிக்கப்பட்ட நியமங்களைச் செயற்படுத்துவதற்கான தத்துவத்தையளித்து ஒழுங்குவிதியை விசாலித்தலாகும்.

**வாசகம் 19 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 26அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதன்மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், பிரிவின் சட்டப்பயனானது, ஒழுங்குவிதிகளை மீறியமை தொடர்பில் குற்றப்பணமொன்றை விதித்தலாகும்.

**வாசகம் 20 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 27அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதன்மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், அப்பிரிவின் சட்டப்பயனானது, கடற்றொழில் வெகுமதி நிதியம் எனவழைக்கப்பட்டு அறியப்படுவதான நிதியமொன்றைத் தாபித்தலாகும்.

**வாசகம் 21 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, “கைவிடப்பட்ட வெளிநாட்டு மீன்பிடி வள்ளம்” மற்றும் “பணிப்பாளர் தலைமையதிபதி” என்னும் சொல்லமைப்புகளுக்கான புதிய வரைவிலக்கணங்களை உள்ளடக்குதலும், “மீன்”, “மீன்பிடித்தல்”, “உள்நாட்டு மீன்பிடி வள்ளம்”, “மீன்பிடியோடுறவுபட்ட நடவடிக்கைகள்”, “செயலாளர்” மற்றும் “இலங்கை நீர்ப்பரப்புகள்” என்னும் சொல்லமைப்புகளுக்கான வரைவிலக்கணங்களைப் பதிலிடுதலுமாகும்.

## கடற்றொழில் (வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்களை ஒழுங்குபடுத்தல்) (திருத்தம்)

ச.வ.- ஓ. 20/2016

### 1979 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, கடற்றொழில் (வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்களை ஒழுங்குபடுத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின்     ஆம் இலக்க, கடற்றொழில் (வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்களை ஒழுங்குபடுத்தல்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்"எ எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, கடற்றொழில் (வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்களை ஒழுங்குபடுத்தல்) சட்டம், "செயலாளர்" என்னும் சொல் முதன்மைச் சட்டவாக்கத்தில் அல்லது ஏதேனும் ஒழுங்குவிதி, விதி, அறிவித்தல் அல்லது அறிவிப்பில் காணப்படும் இடங்களிலெல்லாம் அதற்குப் பதிலாகப் "பணிப்பாளர் தலைமையதிபதி" என்னும் சொல்லை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது. 1979 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்கச் சட்டத்துக்கான பொதுத் திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(i) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"இச்சட்டத்தைச் செயற்படுத்துவதிலும் வலுவுக்கிடுவதிலும் ஆயுதந்தாங்கிய படையினர் முதலியவர்கள் ஒத்துழைத்தல்.".

(ii) "ஆயுதந்தாங்கிய படைகளின் ஏவுநர்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆயுதந்தாங்கிய படைகளின் ஏவுநர்கள், 2009 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, கரையோரக் காவல் திணைக்களச் சட்டத்தின்கீழ்

தாபிக்கப்பட்ட கரையோரக் காவல் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி மற்றும் அமைச்சரினால் பெயர்மூலம் அல்லது பதவிமூலம் எழுத்தில் பெயர் குறிக்கப்பட்ட வேறெவரேனுமாள்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(i) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(4) (அ) (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் உட்பந்தியின்கீழ் கைப்பற்றப்பட்டு தடுத்துவைக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு மீன்பிடி வள்ளம் அல்லது கைவிடப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு மீன்பிடி வள்ளம்; அத்துடன்

(ஆ) (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் கைதுசெய்யப்பட்ட எவரேனுமாள்,

இலங்கையிலுள்ள மிக அண்மையிலுள்ள அல்லது மிக்க வசதியான துறைமுகத்துக்குக் கொணரப்படுதல் வேண்டும்.";

(ii) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(5) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், ஏதேனும் வெளிநாட்டு மீன்பிடி வள்ளம் அல்லது வேறேதேனும் பொருள் இப்பிரிவின்கீழ் கைப்பற்றப்படுமிடத்து, அத்தகைய வள்ளத்தை அல்லது வேறு பொருளைக் கைப்பற்றிய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர், இயன்றளவு விரைவாக, ஆட்களும் வெளிநாட்டு மீன்பிடி வள்ளமும் (4) ஆம் உட்பிரிவின்கீழ்

எந்த நீதிவானின் நியாயாதிக்கத்திலுள்ள துறைமுகத்துக் குக் கொண்டுவரப்படுகின்றார்களோ அல்லது கொண்டு வரப்படுகின்றதோ அந்த நீதிவானின் முன்னர் வேறேதே னும் பொருளைக் கொண்டுள்ள அத்தகைய வள்ளத்தைக் கொணர்தல் வேண்டும் அல்லது அவரினால் சோதனை யிடப்படுவதற்குக் கிடைக்கக்கூடியதாக்குதல் வேண்டும்; அவ்வள்ளம் அல்லது வேறு பொருள் தொடர்பில் தொடுக்கப்பட்ட குற்றவழக்கு முடிவுறும்வரை அத்தகைய வள்ளத்தை அல்லது வேறு பொருளைத் தடுத்துவைத்தல் அல்லது கட்டுக்காப்பில் வைத்திருத்தல் தொடர்பாகத் தகுதியானதென நீதிவான் கருதக்கூடியவாறான அத்தகைய கட்டளையை அவர் ஆக்குதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அவ்வாறு கைப்பற்றப்பட்ட ஏதேனும் மீன் அல்லது நீர்வாழ் தாவரம் எளிதில் அழுகிப்போகக்கூடியதாகவிருக்கும்போது, அதிகார மளிக்கப்பட்ட அலுவலரொருவர், பணிப்பாளர் தலைமை யதிபதியின் அல்லது பணிப்பாளர் தலைமையதிபதி யினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளின் முடிபின்மீது அத்தகைய மீனை அல்லது நீர்வாழ் தாவரத்தை விற்பனைசெய்தல் வேண்டுமென்பதுடன், விற்றுவரவுகளை நீதிவான் நீதிமன்றத்தில் வைப்பிலிடு தலும் வேண்டும்.";

(iii) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில், "மேல் நீதிமன்ற நீதிபதியிடம்" மற்றும் "மேல் நீதிமன்ற நீதிபதியொரு வரின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக முறையே "நீதிவானிடம்" மற்றும் "நீதிவானொருவரின்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 13அ மற்றும் 13ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், இவை அச்சட்டவாக்கத்தின் 13அ மற்றும் 13ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"வெளிநாட்டுக் கப்பல் தடுத்து வைக்கப்படுவதன் மீது தூதரக அலுவலருக்கு அறிவித்தல்.

13அ. (1) (அ) ஏதேனும் வெளிநாட்டு மீன்பிடி வள்ளம் இச்சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்படும் அல்லது கைப்பற்றப்படும்போதெல்லாம்; அத்துடன்

(ஆ) ஒரு வெளிநாட்டு மீன்பிடி வள்ளத்தின் தலைவருக்கு, சொந்தக்காரருக்கு அல்லது வாடகைக்கமர்த்துநர் எவரேனுமிருப்பின் அவருக்கு எதிராக இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் வழக்குத் தொடுக்கப்படும்போதெல்லாம்,

வெளிநாட்டு அலுவல்கள் என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரினூடாக, அந்த மீன்பிடி வள்ளம் எந்த நாட்டுக்குச் சொந்தமாகவுள்ளதோ அந்த நாட்டின் தூதரக அலுவலருக்கு உடனடியாக அறிவித்தல் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) எந்த ஏதுக்களின்மீது வள்ளமானது கைப்பற்றப்பட்டுள்ளதோ அல்லது தடுத்துவைக்கப்பட்டுள்ளதோ அல்லது வழக்கு நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளனவோ அந்த ஏதுக்கள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் சேர்ப்பிக்கப்பட வேண்டிய அறிவித்தலில் குறித்துரைக்கப்படுதல் வேண்டும்.

செலவு தொகைகளுக்கும் சேதவீடுகளுக்குமான பொறுப்பு.

13ஆ. இச்சட்டத்தின் 19ஆ என்னும் பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், கைவிடப்பட்ட வெளிநாட்டு மீன்பிடி வள்ளமொன்று இச்சட்டத்தின்கீழ் தடுத்துவைக்கப்படின் அல்லது கைப்பற்றப்படின், அவ்வெளிநாட்டு மீன்பிடி வள்ளத்தின் தலைவர், சொந்தக்காரர் அல்லது

வாடகைக்கமர்த்துநர் எவரேனுமிருப்பின் அவர், அவ்வெளிநாட்டு மீன்பிடி வள்ளத்தைத் தடுத்துவைப்பதிலும் ஆய்வதிலும் சம்பந்தப்பட்ட செலவுதொகையையும்வேறு இடைநேர் விளைவான செலவுகளையும் இலங்கை அரசாங்கத்துக்குச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவுகள் இடப்படுகின்றன:-

"ஆள்புல நீர்ப்பரப்புகளில் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை மீறுதல் தவறொன்றாதல்.

15. ஏதேனும் வெளிநாட்டு மீன்பிடி வள்ளம் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு மீறுதலாக இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளில்,பாரம்பரிய நீர்ப்பரப்புகளில், பொதுக் குடாக்கடல்களில், ஆறுகளில், ஏரிகளில், வாவிகளில், கழிமுகங்களில், அருவிகளில், கேணிகளில், குளங்களில், குட்டைகளில், வாய்க்கால்களில் அல்லது வேறெல்லாப் பொது உள்நாட்டு அல்லது உள்ளூர் நீர்ப்பரப்புகளில் பயன்படுத்தப்படுமிடத்து, அத்தகைய வள்ளத்தின் தலைவர், சொந்தக்காரர் மற்றும் வாடகைக் கமர்த்துநர் அல்லது அதிலுள்ள எவரேனுமாள் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப் படுவதன்மேல், இரண்டாண்டுகளை விஞ்சாத காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது இதற்கான அட்டவணை I இன் நிரை I இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட மீன்பிடி வள்ளத்தின் நீளத்தினது அடிப்படையில் இதற்கான அட்டவணை I இன் நிரை II இல் குறித்துரைக்கப் பட்ட தொகைளுக்குக் குறையாத குற்றப்பணமொன்றுக்கு ஒவ்வொருவரும் ஆளாதலும் வேண்டும்.

ஆள்புல நீர்ப்பரப்புகளில் 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை மீறுதல் தவறொன்றாதல்.

15அ. ஏதேனும் வெளிநாட்டு மீன்பிடி வள்ளம் 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு மீறுதலாக இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளில், பாரம்பரிய நீர்ப்பரப்புகளில், பொதுக் குடாக்கடல்களில், ஆறுகளில், ஏரிகளில், வாவிகளில், கழிமுகங்களில், அருவிகளில், கேணிகளில், குளங்களில், குட்டைகளில், வாய்க்கால்களில் அல்லது வேறெல்லாப் பொது உள்நாட்டு அல்லது உள்ளூர் நீர்ப்பரப்புகளில் பயன்படுத்தப்படுமிடத்து, அத்தகைய வள்ளத்தின் தலைவர், சொந்தக்காரர் மற்றும் வாடகைக் கமர்த்துநர் அல்லது அதிலுள்ள எவரேனுமாள் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின் கீழான தவறொன் றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரினால் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், இரண்டாண்டுகளை விஞ்சாத காலத்துக்கான மறியற்றண்டனைக்கு அல்லது இதற்கான அட்டவணை II இன் நிரை I இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட மீன்பிடி வள்ளத்தின் நீளத்தினது அடிப்படையில் இதற்கான அட்டவணை II இன் நிரை II இல் குறித்துரைக்கப்பட்ட தொகைளுக்குக் குறையாத குற்றப்பணமொன்றுக்கு ஒவ்வொருவரும் ஆளாதலும் வேண்டும்.

புறநீங்கலான பொருளாதார வலயத்தில் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை மீறுதல் தவறொன் றாதல்.

15ஆ. நான்காம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக ஏதேனும் வெளிநாட்டு மீன்பிடி வள்ளம் இலங்கையின் புறநீங்கலான பொருளாதார வலயத்தில் பயன்படுத்தப்படுமிடத்து, அத்தகைய வள்ளத்தின் தலைவர், சொந்தக்காரர் மற்றும் வாடகைக்கமர்த்துநர் எவருமிருப்பின் அவர் அல்லது அத்தகைய வள்ளத்திலுள்ள எவரேனுமாள் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன் றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப் படுவதன்மேல், இதற்கான அட்டவணை III இன்

நிரை I இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட மீன்பிடி வள்ளத்தின் நீளத்தினது அடிப்படையில் இதற்கான அட்டவணை III இன் நிரை II இல் குறித்துரைக்கப்பட்ட தொகைகளுக்குக் குறையாத குற்றப்பணமொன்றுக்கு ஒவ்வொருவரும் ஆளாதலும் வேண்டும்.

*புறநீங்கலான பொருளாதார வலயத்தில் 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை மீறுதல் தவறொன்றாதல்.*

*15இ.* ஐந்தாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக ஏதேனும் வெளிநாட்டு மீன்பிடி வள்ளம் இலங்கையின் புறநீங்கலான பொருளாதார வலயத்தில் பயன்படுத்தப்படுமிடத்து, அத்தகைய வள்ளத்தின் தலைவர், சொந்தக்காரர் மற்றும் வாடகைக்கமர்த்துநர் எவருமிருப்பின் அவர், அல்லது அத்தகைய வள்ளத்திலுள்ள எவரேனுமாள் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப் படுவதன்மேல், இதற்கான அட்டவணை IV இன் நிரை I இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட மீன்பிடி வள்ளத்தின் நீளத்தினது அடிப்படையில் இதற்கான அட்டவணை IV இன் நிரை II இல் குறித்துரைக்கப்பட்ட தொகைகளுக்குக் குறையாத குற்றப்பணமொன்றுக்கு ஒவ்வொருவரும் ஆளாதலும் வேண்டும்.

*உதவியளித்தல் மற்றும் உடந்தையாக விருத்தல் என்ற தவறு.*

*15ஈ.* இச்சட்டத்தின்கீழான தவறைப் புரிவதற்கு உதவியளிக்கின்றவரும் உடந்தையாகவிருப்பவரும் அல்லது புரிவதற்கு எத்தனிக்கின்றவரும் அல்லது அதனைப் புரிவதில் அல்லது முன்னெடுத்துச் செல்வதில் ஏதேனும் செயலைச் செய்கின்றவருமான எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப் பளிக்கப்பட்டதன்மேல் ஒரு மில்லியன் ஐந்து இலட்சம் ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

ஒரு மாதத்தினுள் வழக்கு நடவடிக்கை களை முடிவுறுத்துதல்.

*15உ. இச்சட்டத்தின்கீழ் புரியப்பட்ட ஏதேனும் தவறு தொடர்பான ஏதேனும் குற்றவழக்கு அத்தகைய எவையேனும் வழக்குநடவடிக்கைகள் நீதிவான் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட தேதி யிலிருந்து ஒருமாதத்தினுள் முடிவுறுத்தப்படுதல் வேண்டும்.*

ஆளெவரும் பிணையில் விடப் படுதலாகாது.

*15ஊ. ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தொன் பதாமாண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், 15 ஆம் அல்லது 15அ என்னும்பிரிவுகளின்கீழான தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது குற்றஞ்சார்த்தப்பட்ட ஆளெவரும் பிணையில் விடப்படுதலாகாது.*

விளக்கம் முடிவுறும்வரை வள்ளம், மீன்பிடிக் கருவிகள் முதலியவற்றை வைத்திருத்தல்.

*15எ. பிரிவு 13 (5) என்பதற்கான காப்பு வாசகத்தில் அடங்கியுள்ள ஏற்பாடுகளுக்கமைய, பிரிவுகள் 15, 15அ, 15ஆ, 15இ மற்றும் 15ஈ என்பவற்றின்கீழான ஏதேனும் தவறைப் புரிவதில் சம்பந்தப்பட்டுள்ளதென அல்லது பயன்படுத்தப் பட்டுள்ளதெனச் சந்தேகிக்கப்பட்ட தொடக்கறுக் கப்பட்ட ஏதேனும் வள்ளம், மீன்பிடிக்கருவிகள், சாதனங்கள் அத்துடன் கப்பற்சரக்கு விளக்கம் முடிவுறும்வரை விட்டுவிடப்படுதலாகாது.*

குறித்தசில சூழ்நிலைகளில் கப்பற்றலைவர், சொந்தக்காரர் முதலியவர்கள் குற்றவாளியாகக் கருதப்படுத லாகாது.

*15ஏ. கப்பற்றலைவர், சொந்தக்காரர், வாடகைக்கமர்த்துநர் அல்லது வள்ளத்திலுள்ள எவரேனுமாள், ஒரு தவறானது தாம் அறியாமல் புரியப்பட்டதென அல்லது அவரது பணிகளின் தன்மையையும் தொடர்புபட்ட சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு அத்தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்குத் தாம் பிரயோகித்திருக்கவேண்டிய உரிய எல்லா விழிப்புக்கவனத்தையும் தாம் பிரயோகித்தாரென அவர் எண்பித்தால், இச்சட்டத் தின்கீழான அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.".*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு, "யூரர் சபை இல்லாது அமரும் மேல்நீதிமன்ற நீதிபதியொருவர் முன்னரான விளக்கத்தின் பின்னர்" மற்றும் "ஏழரை இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத ஒரு குற்றப்பணத்தைச்" என்னும் சொற்களுக்குப் பதிலாக முறையே "நீதிவானொருவரினாலான விளக்கத்தின் பின்னர்" மற்றும் "ஏழரை இலட்சம் ரூபாவுக்குக் குறையாததும் எழுபத்தைந்து மில்லியன் ரூபாவை விஞ்சாததுமான குற்றப் பணத்தைச்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற் றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(i) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(ஈ) கலத்தினுள் ஏறுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவருக்கு அல்லது அவரது உதவியாளர்களுக்கு நியாயமான வசதிகளை அல்லது அத்தகைய அலுவலரும் உதவியாளர்களும் அத்தகைய வள்ளத்தினுட் பிரவேசிக்கும் நேரத்தில் அல்லது அவர்கள் அத்தகைய வள்ளத்தில் இருக்கும்போது அவர்களுக்குப் போதிய பாதுகாப்பை வழங்கத் தவறினால்,";

(ii) "யூரர்சபை இல்லாது அமரும் மேல்நீதிமன்ற நீதிபதி ஒருவர் முன்னரான விளக்கத்தின்பின்னர்" மற்றும் "இருபத்தையாயிரம் ரூபாவுக்கு மேற்படாத ஒரு குற்றப்பணத்தைச்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நீதிவானொருவரினாலான விளக்கத்தின்பின்னர்" மற்றும் "இதற்கான அட்டவணை V இன் நிரை I இலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட மீன்பிடி வள்ளத்தின் நீளத்தினது அடிப்படையில் இதற்கான அட்டவணை V இன் நிரை II இல் குறித்துரைக்கப்பட்ட தொகைகளுக்குக் குறையாதவொரு குற்றப்பணத்தைச்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 17அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 17அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"எல்லாத் தவறுகளும் பிடியாணை யின்றிக் கைது செய்யத்தக்கன வாகவும் பிணையில் விடுபடற்பாலன வல்லாதனவாக வும் இருத்தல்.

17அ. இச்சட்டத்தின்கீழ் புரியப்பட்ட எல்லாத் தவறுகளும், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்துக்குட்பட, பிடியாணையின்றிக் கைதுசெய்யத்தக்கனவாகவும் பிணையில் விடுபடற்பாலனவல்லாதனவாகவும் இருத்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**10**. இச்சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு, "நீதிமன்றம்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "நீதிவான் நீதிமன்றம்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**11**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(i) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மேல் நீதிமன்றத்துக்குச்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ii) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(2) பணிப்பாளர் - தலைமையதிபதி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அரசுக்குரித்தாக்கப்பட்ட ஏதேனும் வள்ளத்தை, மீன்பிடிக் கருவிகளை, மீனை, நீர்வாழ் தாவரத்தை, சாதனங்களை, களஞ்சியப்பொருட்களை அல்லது கப்பற்சரக்கை உடைமையில் எடுத்தல் வேண்டுமென்பதுடன், அவர் தகுதியானதெனக் கருதக்கூடியவாறாக அவற்றை விற்பனைசெய்யலாம் அல்லது வேறு வகையாகக் கையுதிர்க்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 19அ, 19ஆ மற்றும் 19இ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன வென்பதுடன், இவை அச்சட்டவாக்கத்தின் 19அ, 19ஆ மற்றும் 19இ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"கைவிடப்பட்ட வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்கள்.

19அ. இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவதில் சம்பந்தப்பட்டுள்ளதென்ற சந்தேகத்தின் மீது கைவிடப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு மீன்பிடி வள்ளமானது, மீன்பிடிக்கருவிகள், மீன், நீர்வாழ் தாவரங்கள், சாதனங்கள், களஞ்சியப்பொருட்கள் மற்றும் கப்பற்சரக்கு என்பவற்றுடன்சேர்த்து கைப்பற்றப்படுமிடத்து, விதித்துரைக்கப்பட்ட காலப் பகுதியினுள் சொல்லப்பட்ட வள்ளத்துக்கான உரிமைக்கோரிக்கையொன்று செய்யப்பட்டுக்கொண் டிருக்கின்றதாக இருந்தாலொழிய, அது அரசுக்கு முழுமையாக உரித்தாதல் வேண்டும்.

ஒரு விசாரணையைப் பின்பற்றி, கைவிடப்பட்ட மீன்பிடி வள்ளத்தை விடுவித்தல்.

19ஆ. (1) விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் வள்ளத்தின் சொந்தக்காரரினால், தலைவரினால் அல்லது வாடகைக்கமர்த்துநர் எவரேனுமிருப்பின் அவரினால் அத்தகைய கைவிடப்பட்ட வெளிநாட்டு மீன்பிடி வள்ளம், மீன்பிடிக் கருவிகள், மீன், நீர்வாழ் தாவரங்கள், சாதனங்கள், களஞ்சியப் பொருட்கள் மற்றும் கப்பற்சரக்கு என்பவற்றுக்கான உரிமைக்கோரிக்கையொன்று செய்யப்படுமிடத்து, நீதிவான், விசாரணையொன்றைப் பின்பற்றி, அத்தகைய வள்ளம் இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறைப் புரிவதற்குப் பயன்படுத்தப்படவில்லையெனத் திருப்திப்படுவதன்மேல், அத்தகைய வள்ளத்துக்கான அல்லது அதிலுள்ள எவையேனும் இனங்களுக்கான அவரது சட்டப்படியான உரித்துடைமையை நீதிவான்முன்னர் நிலைநாட்டியுள்ள அத்தகைய உரிமைக்கோரிக்கையாளருக்கு இச்சட்டத்தின் 13(5) ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டவொரு கட்டளையின் விளைவாக அது விற்பனை

செய்யப்படின், அத்தகைய வள்ளத்தை அல்லது அதிலுள்ள அத்தகைய இனங்களை அல்லது அதன் விற்றுவரவுகளை விடுவிக்கும்படி அவர் கட்டளை யொன்றை ஆக்குதல் வேண்டும்.

(2) கைவிடப்பட்ட வெளிநாட்டு மீன்பிடி வள்ளம் மற்றும் அதிலுள்ள அத்தகைய எல்லா இனங்களும் தொடர்பாக அரசினால் உறப்பட்ட எல்லாச் செலவுகளையும் உரிமைக்கோரிக்கையாளர் செலுத்து தல் வேண்டும்.

கைவிடப்பட்ட வெளிநாட்டு மீன்பிடி வள்ளத்தை வெளிநாட்டு மீன்பிடி வள்ளமாக எப்போது கருத வேண்டு மென்பது.

19இ. பிரிவுகள் 19அ மற்றும் 19ஆ வில் அடங்கியுள்ளதெதுவும், எவரேனுமாள் அல்லது உருவகமொன்று 4 ஆம், 5 ஆம் பிரிவுகளுட்பட இச்சட்டத்தின் வேறேதேனும்ஏற்பாட்டை மீறியுள்ளார் அல்லது மீறியுள்ளதெனப் புலனாய்வொன்று வெளிக்காட்டும்பட்சத்தில், பிரிவுகள் 15, 15அ, 15ஆ மற்றும் 15இ என்பனவுட்பட, இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாட்டின் நோக்கங்களுக்காகக் கைவிடப்பட்ட வொரு வெளிநாட்டு மீன்பிடி வள்ளம் ஒரு வெளிநாட்டு மீன்பிடி வள்ளமாகக் கருதப்படு வதனைத் தடைசெய்தலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின் றது:-

"தவறுகளை இணக்குதல்.

20. (1) எவரேனுமாள், இச்சட்டத்தின் ஏற்பாடுக ளுக்கு முரணாகச் செயலாற்றியுள்ளாரென நம்புவ தற்குப் பணிப்பாளர் - தலைமையதிபதிக்குப் போதிய சான்றுள்ளவிடத்து, அவர்-

(அ) இலங்கையின் புறநீங்கலான பொருளா தார வலயத்தில் முதலாவது தடவையாகப்

புரியப்பட்ட ஏதேனும் தவறு தொடர்பாக, இச்சட்டத்தின் 20அ என்னும் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட குழாத்தின் விதப்புரை யின்மீது;

(ஆ) அத்தகைய மீறுகை எந்தச் சூழ்நிலைகளில் இடம்பெற்றுள்ளதோ அந்தச் சூழ்நிலை களைக் கருத்திற் கொண்டு,

தண்டமொன்றை விதித்தல் தோதானதாக விருப்பின், அறிவித்தலொன்று கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள் தோன்றி, அவரின்மீது தண்டமொன்று ஏன் விதிக்கப்பட லாகாதெனக் காரணங்காட்டும்படி அவரைத் தேவைப்படுத்துகின்ற அத்தகைய அறிவித்தல், விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் அத்தகைய ஆளுக்குச் சேர்ப்பிக்கப்படுவதனைச் செய்விக்கலாம்.

(2) அந்த அறிவித்தல் எவ்வாளுக்குச் சேர்ப்பிக்கப் படுகின்றதோ அவ்வாள் அத்தகைய அறிவித்தல் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து ஒருவாரத்தினுள் தோன்றி இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாகத் தாம் செயலாற்றினாரென ஒப்புக்கொள்ளுமிடத்து, பணிப்பாளர் - தலைமையதிபதி, அத்தகைய ஆள் செலுத்துவதற்கு ஆளாகவிருக்கக்கூடியதும் இச்சட்டத் தின்கீழ் விதிக்கப்படக்கூடியதுமான அதிகபட்சத் தண்டத்தின் மூன்றிலொன்றை விஞ்சாத தண்ட மொன்றை அவ்வாளின்மீது விதித்தல் வேண்டும்.

(3) எவ்வாளுக்கு அறிவித்தல் சேர்ப்பிக்கப்படு கின்றதோ அவ்வாள் ஒருவர், அத்தகைய அறிவித்தல் கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள், தண்டம் விதிப்பதற்கெதிராகக் காட்டுவதற்குத் தமக்குக் காரணமொன்றுண்டென அவர் கூறுமிடத்து, பணிப்பாளர்-தலைமையதிபதி, விதித்துரைக்கப்பட்ட

முறையில் அக்கருமத்தைக் கேட்டு முடிபுசெய்வதற்கு உடனடியாக முற்படலாம்.

(4) பணிப்பாளர்- தலைமையதிபதி, கொடுக்கப்பட்ட காரணங்களுடன் திருப்தியடையாதவிடத்து, அவர், அதற்கான தமது சொந்தக் காரணங்களைக் குறித்தளித்த பின்னர், இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட தண்டத்தை விதிக்கலாம்.

(5) பணிப்பாளர்- தலைமையதிபதி இப்பிரிவின்கீழ் எவரேனுமாளின் மீது தண்டமொன்றை விதிக்குமிடத்து, அத்தகைய தண்டம்பற்றிய விபரங்களைச் சுட்டிக்காட்டி, அத்தகைய ஆளுக்கு விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான அறிவித்தலொன்று சேர்ப்பிக்கப்படுவதனை அவர் செய்வித்தல் வேண்டும்.

(6) பணிப்பாளர்- தலைமையதிபதியின் அத்தகைய முடிபினால் இன்னலுறும் எவரேனுமாள், பணிப்பாளர் தலைமையதிபதியின் அத்தகைய முடிபு கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் (இதனகத்துப்பின்னர் "செயலாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கடற்றொழில் மற்றும் நீர்வாழுயிரின வளங்கள் அபிவிருத்தி என்னும் விடயம் எவ்வமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அவ்வமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(7) செயலாளர், பணிப்பாளர் - தலைமையதிபதியின் முடிபையும் தவறானது எச்சூழ்நிலைகளில் புரியப்பட்டதோ அச்சூழ்நிலைகளையும்கவனத்துட் கொண்ட பின்னர்:-

(அ) பணிப்பாளர் - தலைமையதிபதியின் முடிபை உறுதிப்படுத்தி மேன்முறையீட்டுக்கு அனுமதி மறுக்கலாம்;

(ஆ) பணிப்பாளர் -தலைமையதிபதியின் முடிபைத் தள்ளிவைத்து மேன்முறை யீட்டை அனுமதிக்கலாம்;

(இ) பணிப்பாளர் -தலைமையதிபதியினது முடிபின் ஏதேனும் திருத்தம், மாற்றம் அல்லது வேறுபடுத்துகைக்கமைய மேன்முறையீட்டை அனுமதிக்கலாம்.

(8) செயலாளரின் முடிபு பணிப்பாளர் தலைமை யதிபதிக்கு அறிவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவர், பணிப்பாளர்-தலைமையதிபதிக்கு அத்தகைய முடிபு அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களினுள் அத்தகைய முடிபுக்கு இணங்கியொழுகுவதற்கான நடபடிகளை எடுத்தலும் வேண்டும்.

(9) செயலாளரின் அத்தகைய முடிபு இன்னலுற்ற ஆளுக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(10) செயலாளரின் அத்தகைய முடிபினால் இன்னலுற்ற எவரேனுமாள், அத்தகைய முடிபு அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் சட்டப் பிரச்சினையின்மீது மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு ஏதேனும் மேன்முறையீட்டைச் செய்யலாம்.

(11) இப்பிரிவின்கீழ் ஏதேனும் தவறை இணக்குதலானது, இருதிறத்தவர்களினதும் கையொப்பத்தின்கீழ் எழுத்தில் நீதிவான் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், குற்றஞ்சாட்டப்பட்டவரை விடுதலை செய்கின்ற பயனையுடையதாதலும் வேண்டும்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 20அ என்னும் பிரிவை உட்புகுத்துதல்.*

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 20அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*"நிபுணர்கள் குழாத்தை நியமித்தல்.*

20அ. (1) பணிப்பாளர் -தலைமையதிபதி, செயலாளரின் கலந்தாலோசனையுடன், கடல்சார் எந்திரவியல், சட்டம் மற்றும் கணக்கியல் துறைகளில் அறிவும், நிபுணத்துவமும், அனுபவமும்கொண்ட மூன்றாட்களைக் கொண்டுள்ள நிபுணர்கள் குழாமொன்றை நியமித்தல் வேண்டும்.

(2) இருபதாம் பிரிவின்கீழ் தவறொன்றை இணக்குதல் தொடர்பாகக் கவனத்துட்கெடுக்கப்பட வேண்டிய கருமங்கள் பற்றிப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு விதப்புரைகளைச் செய்தல் அத்தகைய குழாத்தின் பணியாதல் வேண்டும்.

(3) அமைச்சர், நிதியமைச்சரின் கலந்தாலோசனையுடன் அவர் தீர்மானிக்க வேண்டியவாறான அத்தகைய பணவகையான ஊதியத்தைக் குழாத்தின் உறுப்பினர்களுக்குச் செலுத்துதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(i) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(1) இலங்கையின் புறநீங்கலான பொருளாதார வலயப்பிரதேசத்தில் தவறொன்றைப் புரிவதில் சம்பந்தப்பட்டுள்ள வெளிநாட்டு மீன்பிடி வள்ளம் தடுத்துவைக்கப்படுவதனை நீதிவானொருவர் கட்டளையிட்டுள்ளவிடத்து, அவ்வள்ளம் தொடர்பில் தொடுக்கப்பட்ட ஏதேனும் குற்றவழக்கு முடிவுறும்வரை

வள்ளத்தின் சொந்தக்காரர், அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், தலைவர் அல்லது அவ்வள்ளம் தொடர்பில் நியமிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட உள்நாட்டுப் பிரதிநிதி, இப்பிரிவிற்கிணங்கத் திருப்திகரமானவொரு முறி அல்லது வேறு வகையினதான பிணைப்பொறுப்பு வழங்கப்படுவதன்மீது வள்ளத்தின் விடுவிப்புக்காகச் சொல்லப்பட்ட நீதிவானுக்கு விண்ணப்பிக்கலாம்.".

(ii) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "மேல் நீதி மன்றத்தின் எந்த நீதிபதிக்குச்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "எந்த நீதிவானுக்குச்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**16**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(i) அப்பிரிவை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன்மூலமும்;

(ii) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(2) ஏதேனும் வெளிநாட்டு மீன்பிடி வள்ளம் இலங்கையின் ஏதேனும் கடலோர வலயத்தினுள் கண்டுபிடிக்கப்படுமிடத்தும் அத்தகைய வள்ளத்தின் மீன்பிடிக்கருவிகள் விதித்துரைக்கப்பட்ட முறையில் தொடக்கறுக்கப்படாதவிடத்தும் அல்லது அத்தகைய வள்ளத்தின்மீது மீன்கள் காணப்படுமிடத்தும், முரணாக எண்பிக்கப்படும்வரை, சொல்லப்பட்ட வள்ளம் சொல்லப்பட்ட வலயத்தினுள் மீன்பிடித்தலுக்காகவும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணான ஏதேனும் நோக்கத்துக்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளதென ஊகிக்கப்படலாம்.

(3) ஏதேனும் கைவிடப்பட்ட வெளிநாட்டு மீன்பிடி வள்ளம் கண்டுபிடிக்கப்படுமிடத்து, முரணாக எண்பிக்கப்படும்வரை, இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறைப் புரிவதற்காக அது பயன்படுத்தப்பட்டுள்ளதாக ஊகிக்கப்படலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு, “இலங்கையின் ஏதேனும் நீதிநிருவாக வலயத்தில் அமரும் மேல்நீதிமன்றத்தால் விளங்கப்படற்பாலதாதல் வேண்டும்.” என்னும் சொற்களுக்குப் பதிலாக “மிக அண்மையிலுள்ள அல்லது மிக்க வசதியான துறைமுகம் அமைந்துள்ள பிரதேசத்தின்மீது அல்லது இடப் பிரதேசத்தின்மீது நியாயாதிக்கங்கொண்டுள்ள நீதிவானொருவரினால் விளங்கப்படற்பாலதாதல் வேண்டும்.” என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**18.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (i) ஆம் பந்திக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

“(i) (i) 1982 ஆம் ஆண்டின் கடல்பற்றிய சட்டத்தின்மீதான ஐக்கிய நாடுகள் சபைச் சமவாயத்தில்;

(ii) 1993 ஆம் ஆண்டின் ஓஷன் டியூனா ஆணைக்குழுவினால்;

(iii) 1995 ஆம் ஆண்டின் மீன் கையிருப்பு உடன்படிக்கையின்கீழ்;

(iv) 2009 ஆம் ஆண்டின் சட்டவிரோதமான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடித்தலைத் தடுப்பதற்கும், தடைசெய்வதற்கும், ஒழிப்பதற்குமான துறைமுக அரச வழிமுறைகளின்மீதான ஐக்கிய நாடுகள் சபை உடன்படிக்கையின் உணவு மற்றும் கமத்தொழில் ஒழுங்கமைப்பின்கீழ் (உகஒ);

(v) இலங்கையானது திறத்தவராக வந்துள்ள அல்லது வரவுள்ள வேறேதேனும் சாதனத்தில்,

விதிக்கப்பட்ட நியமங்கள் செயற்படுத்தப்படுதல்;”.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 26அ என்னும் பிரிவை உட்புகுத்துதல்.*

**19.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 26அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"ஒழுங்கு விதிகளை மீறுதல் தவறொன்றாதல்.

26அ. இருபத்தாறாம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் மீறுதலெதுவும் அல்லது அதனுடன் இணங்கியொழுகுவதற்கான தவறுதலெதுவும், நீதிவான் நீதிமன்றத்தின் நீதிவானொருவரினால் விளங்கப்படற்பாலதானதும் ஒரு மில்லியன் ரூபாவுக்குக் குறையாத குற்றப்பணத்தினால் தண்டிக்கப்படற்பாலதுமான தவறொன்றாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 27அ என்னும் பிரிவை உட்புகுத்துதல்.

**20.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 27 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 27அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"வெகுமதி நிதியத்தைத் தாபித்தல்.

27அ. (1) (இதனகத்துப்பின்னர் "வெகுமதி நிதியம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) கடற்றொழில் வெகுமதி நிதியம் என அழைக்கப்பட வேண்டிய நிதியமொன்றிருத்தல் வேண்டும்.

(2) பணிப்பாளர்-தலைமையதிபதி வெகுமதி நிதியத்தின் நிருவாகத்துக்குப் பொறுப்பாக விருத்தல் வேண்டும்.

(3) பத்தொன்பதாம் பிரிவின்கீழான விற்பனைகளிலிருந்து தேறிப்பெறப்பட்ட எல்லா விற்றுவரவுகளும் வெகுமதி நிதியத்துக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

(4) பணிப்பாளர்-தலைமையதிபதி, காலத்துக்குக் காலம், அவர் தகுதியானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய பணத்தொகையை, வெகுமதி நிதியத்திலிருந்து-

(அ) 3 ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்டவாறான எவரேனுமாளுக்கு;

(ஆ) எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு; அல்லது

(இ) எவரேனும் தகவலளிப்பவருக்கு,

வெகுமதியொன்றாகச் செலுத்துதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய பணத் தொகை, இச்சட்டத்தின்கீழ் விதித்துரைக்கப்பட வேண்டிய அதிகபட்சத் தொகையை விஞ்சுதலாகாது.

(5) வெகுமதி நிதியத்தின் கணக்குகள், அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரைக்கிணங்கக் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் வருடாந்தம் கணக்காய்வுசெய்யப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**21**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(i) "நீர்வாழ் தாவரம்" என்பதன் வரைவிலக்கணத்துக்கு நேர்முன்னர் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

" "கைவிடப்பட்ட வெளிநாட்டு மீன்பிடி வள்ளம்" என்பது, ஒரு வள்ளத்தில் எவரேனும் ஆள் அல்லது ஆட்கள் இல்லாத அவ்வள்ளத்தையும் உள்ளடக்கும்;";

(ii) "அதிகாரம்பெற்ற அலுவலர்" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

"பணிப்பாளர்-தலைமையதிபதி" என்பது, 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத் தின் 2 ஆம்

பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட கடற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்;";

(iii) ''மீன்'' என்னும் சொல்லமைப்பின் வரைவிலக் கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும்:-

"மீன்" என்பது, உயிருள்ள அல்லது உயிரற்ற, ஏதேனும் நீரில் சீவிக்கும், நீர்வாழ் அல்லது கடல்சார் விலங்கு என்று பொருளாகும் என்பதுடன், அவற்றின் முட்டைகள், சினைத் திரள், மீன்முட்டை மற்றும் மீன்குஞ்சுக் கட்டங்களையும், அவற்றின் பாகங்களுள் எவற்றையும் உள்ளடக்கும்; அத்துடன் தங்குதடையற்று நீந்தாத இனங்களைச் சேர்ந்த எல்லா உயிர்ப்பொருள்களையும் உள்ளடக்கும்;";

(iv) ''மீன்பிடித்தல்'' என்னும் சொல்லமைப்பின் வரை விலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக் கணத்தை இடுவதன்மூலமும்:-

"மீன்பிடித்தல்" என்பது, ஏதேனும் முறைமூலம் மீனைத் தேடுதல், ஈர்த்தல், கண்டறிதல், பிடித்தல், எடுத்தல் அல்லது கொல்லுதல் அல்லது மீனைச் சேர்த்துக்குவித்தல் அல்லது நீர்வாழ் தாவரங்களைச் சேகரித்தல் என்பவற்றையும் உள்ளடக்கும் என்பதுடன், மீனைப் பிடிப்பதற்கான, எடுப்பதற்கான அல்லது கொல்லுவதற்கான, அல்லது நீர்வாழ் தாவரங்களைச் சேகரிப்பதற்கான எத்தனமொன்றையும் இதனகத்துமுன்னர் குறிப்பிடப்பட்ட செயல்களுள் எவற்றையும் இலங்கை நீர்ப்பரப்புகளில் நிறைவேற்றுவதற்கான எத்தனமொன்றையும் உள்ளடக்கும்;";

(v) "உள்ளூர் மீன்பிடி வள்ளம்" என்பதன் வரைவிலக்கணத்தில் "பதியப்பட்டதும்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "பதியப்பட்டதும் அல்லது -" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(vi) "மீன்பிடியோடுறவுபட்ட நடவடிக்கைகள்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும்:- "

"மீன்பிடியோடுறவுபட்ட நடவடிக்கைகள்" என்பது, மீன்பிடித்தல் தொடர்பாகப் பின்வருவனவற்றையும் உள்ளடக்கும்:-

(அ) இலங்கை நீர்ப்பரப்புகளிலுள்ள ஏதேனும் வள்ளத்துக்கு அல்லது கலத்துக்கு அல்லது அதிலிருந்து மீனை மாற்றியேற்றுதல்;

(ஆ) மீன்பிடித்தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட மீனை அல்லது நீர்வாழ் தாவரங்களைக் களஞ்சியப்படுத்துதல், பதனிடுதல், பேணிக்காத்தல் அல்லது இடம்பெயர்த்தல்;

(இ) மீன்பிடி வள்ளங்களுக்கு எரிபொருள் நிரப்புதல் அல்லது வழங்குதல் அல்லது மீன்பிடித் தொழிற்பாடுகளுக்கு ஆதாரமான அல்லது துணைநிலையான வேறு நடவடிக்கைகளைப் புரிதல்;

(ஈ) கடலில் ஆளணியினர், எரிபொருள், மீன்பிடிக் கருவிகள் மற்றும் வேறு வழங்கல்களுக்கு முன்னேற்பாடுசெய்தல்;

(உ) மேலேயுள்ளவற்றுள் எதனையும் செய்வதற்கு எத்தனித்தல் அல்லது ஆயத்தஞ்செய்தல்;";

(vii) “செயலாளர்” என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும்:-

“”செயலாளர்” என்பது, கடற்றொழில் என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் என்று பொருளாதல் வேண்டும்;”;

(viii) “இலங்கை நீர்ப்பரப்புகள்” என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:-

“ “இலங்கை நீர்ப்பரப்புகள்” என்பது,-

(அ) 1976 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, கடலோர வலயங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட பிரகடனத்தின் மூலம், இலங்கையின் ஆள்புலக் கடலென வெளிப்படுத்தப்பட்ட பிரதேசம் என்று;

(ஆ) 1976 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, கடலோர வலயங்கள் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட பிரகடனத்தின் மூலம், இலங்கையின் அணித்தாயுள்ள வலயம் என வெளிப்படுத்தப்பட்ட பிரதேசம் என்று;

(இ) 1976 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, கடலோர வலயங்கள் சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட பிரகடனத்தின் மூலம், இலங்கையின் புறநீங்கலான பொருளாதார வலயம்என வெளிப்படுத்தப்பட்ட பிரதேசம் என்று;

(ஈ) 1976 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, கடலோர வலயங்கள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட பிரகடனத்தின் மூலம், இலங்கையின் நீர்ப்பரப்பு கள் என வெளிப்படுத்தப்பட்ட பிரதேசம் என்று; அத்துடன்

(உ) எல்லாப் பொதுக் குடாக்கடல்கள், ஆறுகள்,ஏரிகள், வாவிகள், கழி முகங்கள், அருவிகள், கேணி கள், குளங்கள், குட்டைகள், கால்வாய் கள் என்று, அத்துடன் வேறு எல் லாப் பொது உள்நாட்டு அல்லது உள்ளூர் நீர்ப்பரப்புகள் என்று,

பொருளாகும்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**22**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**அட்டவணை I** (பிரிவு 15)

| **பத்தி I** | **பத்தி II** |
|---|---|
| **மீற்றர்களில் வள்ளத்தின் நீளம்** | **குற்றப்பணம் (ரூபா மில்லியன்) ஆள்புல நீர்ப்பரப்புகள்** |
| 15 க்குக் குறைவாக | 5 |
| 15 க்கு மேற்படவும் 24 க்குக் குறைவாகவும் | 20 |
| 24 க்கு மேற்படவும் 45 க்குக் குறைவாகவும் | 100 |
| 45 க்கு மேற்படவும் 75 க்குக் குறைவாகவும் | 150 |
| 75 க்கு மேற்பட | 175 |
| நிருவாக ரீதியிலான தண்டம் | ஏற்புடையதல்ல |

**அட்டவணை** II (பிரிவு 15அ)

| **பத்தி** I | **பத்தி** II |
|---|---|
| **மீற்றர்களில் வள்ளத்தின் நீளம்** | **குற்றப்பணம் (ரூபா மில்லியன்) ஆள்புல நீர்ப்பரப்புகள்** |
| *15 க்குக் குறைவாக* | *3* |
| *15 க்கு மேற்படவும் 24 க்குக் குறைவாகவும்* | *15* |
| *24 க்கு மேற்படவும் 45 க்குக் குறைவாகவும்* | *75* |
| *45 க்கு மேற்படவும் 75 க்குக் குறைவாகவும்* | *120* |
| *75 க்கு மேற்பட* | *150* |
| நிருவாக ரீதியிலான தண்டம் | ஏற்புடையதல்ல |

**அட்டவணை** III (பிரிவு 15ஆ)

| **பத்தி** I | **பத்தி** II |
|---|---|
| **மீற்றர்களில் வள்ளத்தின் நீளம்** | **குற்றப்பணம் (ரூபா மில்லியன்) புபொ வலயத்தினுள்** |
| *15 க்குக் குறைவாக* | *3* |
| *15 க்கு மேற்படவும் 24 க்குக் குறைவாகவும்* | *15* |
| *24 க்கு மேற்படவும் 45 க்குக் குறைவாகவும்* | *75* |
| *45 க்கு மேற்படவும் 75 க்குக் குறைவாகவும்* | *120* |
| *75 க்கு மேற்பட* | *150* |
| நிருவாக ரீதியிலான தண்டம் | தொடக்கக் குற்றப்பணத்தின் *1/3* |

**அட்டவணை** IV (பிரிவு 15இ)

| **பத்தி** I | **பத்தி** II |
|---|---|
| ***மீற்றர்களில் வள்ளத்தின் நீளம்*** | ***குற்றப்பணம் (ரூபா மில்லியன்) புபொ வலயத்தினுள்*** |
| *15 க்குக் குறைவாக* | *1.5* |
| *15 க்கு மேற்படவும் 24 க்குக் குறைவாகவும்* | *5* |
| *24 க்கு மேற்படவும் 45 க்குக் குறைவாகவும்* | *50* |
| *45 க்கு மேற்படவும் 75 க்குக் குறைவாகவும்* | *75* |
| *75 க்கு மேற்பட* | *100* |
| *நிருவாக ரீதியிலான தண்டம்* | *தொடக்கக் குற்றப்பணத்தின் 1/3* |

**அட்டவணை** V (பிரிவு 17)

| **பத்தி** I | **பத்தி** II |
|---|---|
| ***மீற்றர்களில் வள்ளத்தின் நீளம்*** | ***குற்றப்பணம் (ரூபா)*** |
| *15 க்குக் குறைவாக* | *100,000* |
| *15 க்கு மேற்படவும் 24 க்குக் குறைவாகவும்* | *200,000* |
| *24 க்கு மேற்படவும் 45 க்குக் குறைவாகவும்* | *500,000* |
| *45 க்கு மேற்படவும் 75 க்குக் குறைவாகவும்* | *1,500,000* |
| *75 க்கு மேற்பட* | *7,500,000* |